சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 1439/ஆ6/2022 நாள். .08.2022

பொருள்: பாரத சாரண சாரணியர் இயக்கம் குருளையர் (Cubs) நீலப்பறவையர் (Bulbuls) - அரசு, அரசு உதவி பெறும், மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ (CBSE) உள்ளிட்ட அனைத்துபள்ளிகளிலும் ஏற்படுத்துதல் - நெறிமுறைகள் - வழிகாட்டுதல் சார்பாக

பார்வை: மாநில முதன்மை ஆணையர், பாரத சாரண சாரணிய இயக்கம் கடித ந.க.எண்.103/BSG/நிர்வாகம்/2019-20 நாள். 18.07.2019

பார்வையில் காண் மாநில முதன்மை ஆணையர், பாரத சாரண சாரணிய இயக்கம், அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இளம் சிறார்களின் நற்பண்புகளையும் சிந்தனைகளையும் வளர்த்தெடுக்கும் இடமாக சாரண இயக்கத்தின் குருளையர் (Cubs) மற்றும் நீலப்பறவையர் (Bulbuls) அமைப்புகள் திகழ்கின்றன. இந்த அமைப்பில் 5. வயது முதல் 9. வயது வரையான மாணவ மாணவிகள் சேர்ந்து பயன்பெற முடியும்.

குருளையர் மற்றும் நீலப்பறவையர் அமைப்பில் சேரும் மாணவ, மாணவிகள் உயர்நிலை வகுப்புகளுக்கு செல்லும் போது சாரண, சாரணிய இயக்கத்திலும் (Scouts &Guides) மேல்நிலை மற்றும் கல்லூரிகளுக்கு செல்லும்போது திரிசாரணர், திரிசாரணியர் (Rovers and Rangers) இயக்கத்திலும் தொடர்ந்து சேர்ந்து பயிற்சி பெற்று தொண்டுள்ளம் கொண்ட ஆளுமை நிறைந்த சிறந்த மனிதனாக செயல்பட இயலும்.

எனவே சென்னை மாவட்டத்திலுள்ள தொடக்க வகுப்புகள் உள்ள அனைத்து பள்ளிகள் குருளையர் (Cubs) நீலப்பறவையர் (Bulbuls) அமைப்பினை ஏற்படுத்துவது அவசியமாகிறது. குறிப்பாக தொடக்க வகுப்புகள் உள்ள பள்ளிகள் வட்டாரக் கல்வி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் உள்ளதால் அவர்களின் உதவியுடன் இப்பணியினை மேற்கொள்ள வேண்டும். 2022-23 ஆம் கல்வியாண்டிற்குள் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களும் இதில் தனிக்கவனம் செலுத்தி தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் புதிய அமைப்புகளை அமைக்கச் செய்து இப்பணியினை செம்மையாக நிறைவேற்ற வேண்டும். புதிய அமைப்புகளை ஏற்படுத்துவது சார்ந்து சென்னையிலுள்ள 5 கல்வி மாவட்ட சாரண/சாரணியர் பொறுப்பாளர்களை அந்தந்த மாவட்டக் கல்வி

அலுவலர்கள் /வட்டாரக் கல்வி அலுவர்கள் முன்னிலையில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு வரவழைத்து திட்டமிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு கல்வி மாவட்டங்களில் உள்ள பள்ளிகளில் புதிய அமைப்புகள் (New units) அமைக்கும் பொறுப்பு மாவட்ட அமைப்பு ஆணையர்களையே (District Organising Commissioners) சேரும் எனவே மாவட்ட ஆணையர்களின் அறிவுரையை பின்பற்றி செம்மையாக செயல்பட வேண்டும்.

மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்இ (Matric and CBSE) பள்ளிகளை பொருத்தவரையில் மாணவர்கள் தங்களுக்கு தேவையான சீருடைகளை சொந்த செலவிலேயே வாங்கிக் கொள்ள வாய்ப்புள்ளது. அரசு பள்ளிகளை பொருத்தவரையில் மாணவர்கள் சாரண சீருடைகள் வாங்குவதில் சில பொருளாதார இடர்பாடுகள் உள்ளது. ஆனால் அக்காரணம் காட்டி அரசுப் பள்ளிமாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய அறிய வாய்ப்பினை மறுப்பது சரியானது அல்ல. எனவே பள்ளி அமைந்துள்ள பகுதியில் உள்ள வணிக தலைவர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், தொழில் முனைவோர், தொண்டு நிறுவனங்களை அணுகி நிதியை திரட்டி திட்டத்தினை செம்மையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்த வேண்டும்.

புதியதாக தொடங்கப்படும் அமைப்புகளுக்கு தேவையான சீருடைகள், பயிற்சி மற்றும் தேர்வு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அளித்தல், செயல்பாடுகள் தொடர்பான ஆலோசனைகள் மாவட்ட அமைப்பு ஆணையர் மற்றும் மாவட்ட பயிற்சி ஆணையரால் வழங்கப்படும்.

மேலும் அய்யப்பாடுகள் ஏதேனும் இருப்பின் கீழ்க்கண்ட அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டும். என்பதை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் /முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொறுப்பாளர்கள் விவரம்**

| பெயர் | பொறுப்பு | தொலைபேசி எண் |
|---|---|---|
| திரு. K. கமலக்கண்ணன் | மாநில அமைப்பு ஆணையர் (சாரணர்) | 9789245399 |
| திருமதி K. மதுபாலா | மாநில அமைப்பு ஆணையர் (சாரணியர்) | 7299604087 |
| திரு K.K. வெங்கட்ரமணன் | மாநில உதவி அமைப்பு ஆணையர் (சாரணர்) | 9443943185 |
| செல்வி M. செல்வி | மாநில உதவி அமைப்பு ஆணையர் (சாரணியர்) | 8903249280 |

| | | |
|---|---|---|
| திரு. ஜெயின் அலா-தின் | மாநில வளர்ச்சி ஒருங்கிணைப்பாளர் | 9444149963 |
| முனைவர் T. சேகர் | தென் சென்னை கல்வி மாவட்ட செயலாளர் (சாரணர்) | 9941427327 |
| திரு. G. மகாதேவன் | மத்திய சென்னை கல்வி மாவட்ட செயலாளர் (சாரணர்) | 9962871600 |
| முனைவர் K. ஜெபமாலை | வட சென்னை கல்வி மாவட்ட செயலாளர் (சாரணர்) | 9176331632 |
| திரு. S. இராஜேந்திரன் | கிழக்கு சென்னை கல்வி மாவட்ட செயலாளர் (சாரணர்) | 9884351106 |
| திரு.S. இரவிந்திரன் | மேற்கு சென்னை கல்வி மாவட்ட செயலாளர் (சாரணர்) | 9840903300 |

முதன்மைக் கல்வி அலுவலர்

30.8.2022 சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்
3. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் (மாவட்டக் கல்வி அலுவலர்/வட்டாரக் கல்வி அலுவலர் வழியாக)
4. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை-03

நகல்

1. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம் சென்னை-06,அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது
2. மெட்ரிக் பள்ளி இயக்குநர், மெட்ரிக் பள்ளி இயக்குநரகம், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது
3. தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது
4. பாரத சாரண சாரணிய இயக்கக மாநில முதன்மை ஆணையர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.